7th November 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : தென்னை வளர்ப்புக்குக் கொடுக்கக்கூடிய சலுகையைப் போலவே பனை மர வளர்ச்சிக்கும் ஊக்கம் அளிக்கத் திட்டம் இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் இல்லை. பனை மரங்களை அதிகமாக உற்பத்தி செய்ய தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தான் என்னைப் பொருத்தமட்டில் நினைக்கிறேன். ஏற்கனவே இருக்கின்ற பனையைத் தவிர புதிதாகப் பனையைக் காணவில்லை. ஆகவே, தென்னை வளர்ப்பை அதிகப்படுத்த திட்டம் தீட்டியிருப்பது போல் பனை வளர்ப்புக்கும் திட்டம் தீட்டுவது நல்லது என்று நினைக்கிறேன்.

திரு. கோ. சி. மணி : தேவஸ்தான இடங்களை விவசாயிகள் ஏலத்திற்கு எடுத்தோ அல்லது குத்தகை மூலம் எடுத்தோ தென்னை வளர்ப்பில் ஈடுபடும்போது கொடுக்கப்படுகிற உதவித் தொகை அந்த விவசாயிகளுக்குச் சேரும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கொடுக்கப்படும் கடன் நிலச்சுவான்தாருக்குப் போகிறதா அல்லது விவசாயிக்குப் போகிறதா என்ற தகவல் இல்லை. ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் கொடுக்க வேண்டுமென்பது திட்டம்.

திரு. சா. கணேசன் : பனை வளர்ப்புக்கு ஆக்கம் கொடுக்க வேண்டும் என்பது தங்களுடைய கருத்து என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, சிறப்பாக பனை விளையக் கூடிய பகுதிகளிலே உள்ள அதிகாரிகளுக்கு ஆங்காங்குள்ள வயல்கள் அல்லது தோட்டக்காடுகள் போன்றவற்றில் அவற்றின் வேலிகள் முழுவதிலும் தொடர்ந்து பனை வேலியாக வைப்பதற்கு ஆக்கமும் அதற்கு உணர்ச்சியும் ஊட்டக்கூடிய நிலையில் அறிக்கை கொடுத்து அவர்கள் மூலமாக அதை வளர்க்கச் செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். a.m.

கனம் திரு. பூ. கக்கன் : புன்செய் நிலங்களில் வேலி ஓரங்களில் பனம்கொட்டைகளைப் போட்டு நல்லமுறையில் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யலாம். வரப்பு அகலமாக இருந்தால் வைக்கலாம். பக்கத்தில் இருந்தால் உழுவதற்கு கஷ்டமாக இருக்கும். பார்த்து, அகலமாக இருந்தால், புன்செய் நிலங்களின் வேலி ஓரங்களில் வைப்பது நல்லது. தோட்டங்களாகவும் ஏற்படுத்துவது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கொலை வழக்குகள்

* 473 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில், 1964-ம் ஆண்டு ஜனவரி முதல் இன்று வரை பதிவு செய்யப்பட்ட கொலை வழக்குகள் எத்தனை, தாலுகாவாரியாக ?

[7th November 1966

(இ) அவற்றுள், தள்ளுபடியில் முடிந்த, தண்டனையில் முடிந்த வழக்குகள் முறையே எத்தனை, தாலுகாவாரியாக ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) சபைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. சா. கணேசன் : பதில் 'இன்றுவரை' என்றிருக்கிறது. அது என்று வரை ?

கனம் திரு. பூ. கக்கன் : அங்கத்தினர் அவர்கள் கேள்வி போட்டதற்கு பதில் வருவது வரை. வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1964-ம் ஆண்டு என்று சொல்லியிருக்கிறது. அதில் தேதி தாளில்லை. தேதி வேண்டுமென்று தனியாகக் கேட்டால் பதில் சொல்லலாம்.

திரு. மு. கருணாநிதி : பதிவுசெய்யப்பட்ட கொலைகள் பற்றிய விவரம் அளிக்கப்பட்டிருக்கிறது. நடந்த கொலைகள் எவ்வளவு ? குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாமல் போய்விட்ட கொலைகள் எவ்வளவு என்ற விவரத்தைக் கூற முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி வேண்டும்.

MR. SPEAKER : The statement placed on the Table shows that it is up to 3rd May 1966.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் சொல்லாவிட்டாலும் கனம் சபாநாயகர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி.

மது விலக்கு வழக்குகள்

* 479 கேள்வி.—**திரு. ஏ. சுவாமிதாஸ் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் 1965-66-ல் எத்தனை மதுவிலக்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

(இ) அவ்வழக்குகளால் தண்டனையடைந்த குற்றவாளிகள் எத்தனை பேர் ? ஆண்கள் எத்தனை ? பெண்கள் எத்தனை ?

(உ) 1964-65 ஆண்டைவிட மதுவிலக்கு குற்றவாளிகளின் எண்ணிக்கை கூடியிருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா ? எத்தனை சதவீதம் ?

THE HON. SRI P. KAKKAN : (a) 179,058.

(b) 160,727

Males—154,508

Females—6,219.

(c) Increased; 30 per cent.

---

* 575–576-ம் பக்கங்களில் ஒன்பதாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.